விலை சதம் 25 ★ ★

# ஈழநாடு

மலர்: 16 இதழ்: 11
யாழ்ப்பாணம் மாசி 9 முஹறம் 27 வியாழக்கிழமை 21—2—74

‘ஈழநாடு’ சந்தா
(தபால் மூலம் விநியோகம்)

| | தினசரி - வாரமலர் [உட்பட] | வாரமலர் [மட்டும்] |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 34-00 | ரூ. 6-00 |
| 6 மாதம் | ரூ 67-00 | ரூ. 12-00 |
| 1 வருடம் | ரூ.132-00 | ரூ. 23-00 |

[ஆள் மூலம் விநியோகம்]
(யாழ். மாநகரசபை எல்லைக்குள்)

| | தினசரி - வாரமலர் (உட்பட) | வாரமலர் [மட்டும்] |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 26-00 | ரூ. 5-00 |
| 6 மாதம் | ரூ. 51-00 | ரூ. 10-00 |
| 1 வருடம் | ரூ. 100-00 | ரூ. 18-00 |

JAFFNA COLLEGE 22 FEB 1974 UNDERGRAD

# நெல், அரிசி வைத்திருக்கும் இடங்களில் திடீர் சோதனை

## அரசின் திட்டம் பற்றி தியாகராசா எம். பி. தகவல்

### “தேசாபிமானத்துடன் நெல்லை அரசிடம் கையளியுங்கள்”

(யாழ்ப்பாணம், வியா.) ஆனையிறவுத் தடையைத் தாண்டி இங்கு கொண்டு வரப்பட்டுள்ள நெல், அரிசி முதலியவற்றை பதுக்கி வைத்திருக்கும் இடங்களில் அரசாங்கம் திடீர் சோதனை நடத்தவுள்ளது. ஆனையிறவுத் தடையில் வாகனச் சாரதிகளால் கொடுக்கப் பட்டுள்ள விலாசங்களிலேயே முதலாவது ‘வேட்டை’ ஆரம்பமாகவுள்ளது.

இத்தகவலை வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசா நேற்றுத் தெரிவித்தார்.

“விவசாயிகளிடமிருந்து நெல்லை அரசாங்கம் பலாத்காரமாக வாங்க மாட்டாது. தேசாபிமானத்துடன் மேலதிகமாகவுள்ள நெல்லை அரசாங்கத்திடம் கையளித்து விடுங்கள்” என்று திரு. ஆ. தியாகராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் திரு. தியாகராசா மேலும் கூறியிருப்பதாவது:

“ஆனையிறவுத் தடைமுகாமைத் தாண்டி நெல், அரிசி முதலியவற்றுடன் வந்த வாகனச் சாரதிகள் தாங்கள் கொண்டுசெல்லும் நெல், அரிசியை எவ்விடத்தில் வைத்திருப்பார்கள் என்பது பற்றிய விபரங்களைக் கொடுத்திருந்தார்கள். குறிப்பிட்ட விலாச இடங்களை அரசாங்க உயர் அதிகாரிகள் கொண்ட குழு சோதனை செய்யத்திட்டமிடப் பட்டுள்ளது. இதன்மூலம் பதுக்கி வைத்திருக்கும் நெல் அரிசி முதலியன பறிமுதல் செய்யப்படும்.

இதற்கு இடமளிக்காமல் வியாபாரிகளோ அல்லது விவசாயிகளோ தங்கள் வசம் மேலதிகமாகவுள்ள நெல், அரிசியை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விடுங்கள். தேசாபிமானத்துடன் வடபகுதி விவசாயிகள் நடந்து கொண்டால் இப்பகுதியில் அதிகரித்துவரும் அரிசி விலையை ஓரளவு குறைத்து விடலாம்.

கிழக்கு மாகாணத்தில் ஒரு கொத்து அரிசி இரண்டு ரூபாவாக விற்பனை செய்யப்படும் போது வடக்கில் மட்டும் ஏன் இந்த நிலை? விவசாயிகள் இதனை உணர்ந்து பதுக்கல் காரரிடமும் வியாபாரிகளிடமும் நெல்லைக் கொடுக்க வேண்டாம். அரசாங்கம் விவசாயிகளிடம் பலாத்காரமாக நெல்லை வாங்கமாட்டாது. மேலதிகமாகவுள்ள நெல்லை நீங்களே அரசிடம் ஒப்படையுங்கள்.

#### அருளம்பலத்தின் திட்டம்

ப. நோ. கூ. சங்கங்கள் மூலமாக நெல்லைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்ற விவசாய அரசியல் அதிகாரி திரு. வி. அருளம்பலத்தின் யோசனையை முன்னரேயே அமுல் படுத்தியிருந்தால் இது வரை காலமும் ஆனையிறவுத் தடைமுகாமில் நிகழ்ந்துவந்த கஷ்டங்களும் மோசடிகளும்

(6ம் பக்கம் பார்க்க)

## “மேலதிக அரிசி யாழ். மாவடத்துக்கும் வேண்டும்!”

யாழ்ப்பாணம், வியாழன் கொழும்பு மாவட்டத்தில் மேலதிக அரிசி விநியோகிப் பதுபோல யாழ்ப்பாண மாவட்டத்திலும் மேலதிக அரிசி விநியோகிக்கப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சி அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

அரசாங்கம் நல்ல திட்டத்தைக் கொண்டுவந்தபோதிலும் சிலர் அதனை முறியடித்துக் கொண்டேயிருக்கின்றனர். அரசு மேலும் தாமதியாது தேசபக்தியுள்ள, அரசுக்கு விஸ்வாசமுள்ளவர்களை உரிய இடங்களில் நியமிப்பதுடன் பிற்போக்கு அதிகாரிகளை உடன் ரத்துச்செய்யவேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

மேலதிக பல்கலைக்கழகக் கல்லூரியாக இராமநாதன் கல்லூரியையும், பரமேஸ்வராக் கல்லூரியையும் ஆக்க வேண்டும். காங்கேசந்துறை வீதியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியையும் ஐக்கிய முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியபடி பல்கலைக்கழக வளாகமாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்” என்றும் கோரப்பட்டிருக்கிறது. யாழ். மாவட்டக் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் இந்தக் கோரிக்கைகளை அனுப்பிவைத்துள்ளார்.

## ஒரு புசல் அரிசியை மட்டுமே வைத்திருக்கலாம்

யாழ்ப்பாணம், வியாழன் அண்மையில் வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் கூறப்பட்டுள்ளபடி, விவசாயி அல்லாத ஒருவர் ஒரு புசல் அரிசியை (64 ருத்தல்) அல்லது இரண்டு புசல் நெல்லை (92 ருத்தல்) மட்டுமே தன்னுடன் வைத்திருக்க முடியும்.

தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு அதிகாரி எவரும் எந்த வீட்டுக்குள்ளும் வளவுக்குள்ளும் வேறு கட்டிடங்களுக்குள்ளும் நியாயமான நேரத்தில் சென்று சோதனையிடவும் அங்கே அனுமதிக்கப்பட்ட அளவுக்கதிகமாக நெல்லோ, அரிசியோ இருந்தால் அவற்றைக் கைப்பற்றுவதற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

சட்டப் பிரமாணங்களை மீறும் செயல்களுக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களை மாஜிஸ்திரேட் தேவையானால் பறிமுதல் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக வளாகம்

## “சகல துறைக் கல்விக்கும் வடக்கில் வசதியுண்டு”

வண்ணார்பண்ணை, புதன் வடமாகாணத்தில் பல்கலைக்கழக வளாகமும் நுண்கலைக் கல்லூரியும் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதற்காகவும், இராமநாதன் கலைக்கல்லூரியை இதற்காக உத்தியோகரீதியாகக் கையேற்பதற்கு உத்தரவு வழங்கியதற்கும் நன்றிதெரிவித்து யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களும் ஐக்கியமுன்னணி ஆதரவாளர்களும் கல்வி அமைச்சர் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்துக்கு மகஜர் அனுப்பிவைத்துள்ளனர்.

அம் மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:

இங்கு ஒரு பல்கலைக்கழக வளாகத்தைப் பிரச்சினையின்றி உடனடியாக உருவாக்குவதற்குச் சகல வசதிகளும் இருக்கின்றன.

மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம், சமூகசாஸ்திரவியல், விவசாயம் ஆகிய ஐந்து பகுதிகளையும் உள்ளடக்கியதாக இவை அமையவேண்டும்: திருநெல்வேலியில் விவசாயப்பகுதியை நடத்தமுடியும். இதற்கான சகல வாய்ப்பும் வசதியும் இங்கு இருக்கின்றன.

கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரியில் பொறியியல் பகுதியை நடத்தக்கூடிய வசதிகள் இருக்கின்றன.

மருத்துவம், சமூகசேவை, பொறியியல் பகுதியை அமைப்பதற்கும் யாழ். பரமேஸ்வராக் கல்லூரியில் பல வசதிகள் இருக்கின்றன. இதற்கான ஆய்வு வசதிகளும் யாழ். ஆஸ்பத்திரியில் இருக்கின்றன.

“யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைக் கல்லூரியில் விஞ்ஞானப் பகுதியை நடத்த வசதியிருக்கிறது.

மேலும் இராமநாதன் நுண்கலைக்கல்லூரியில், கலைக்கூடம் கர்நாடக, இந்துஸ்தானி, கதகளி, சிற்பம், ஓவியம் ஆகியவற்றுக்குப் போதிய வசதிகள் இருக்கின்றன. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்கள் போல் இக்கல்லூரியையும் அமைக்கமுடியும்.

இப்படியான முறையில் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழக வளாகத்தையும் நுண்கலைக் கல்லூரியையும் அமைப்பதால் தென் இந்தியக் கலை கலாச்சாரத் தாக்கத்திலிருந்து இலங்கைத் தமிழ் மக்கள் விடுபடவாய்ப்பு ஏற்படும்.

“இதன் மூலம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் கலை கலாச்சாரத் தொடர்புகளுக்கும் ஒற்றுமை காண முடியும். எமது நாட்டின் பாரம்பரியமும் பாதுகாக்கப்படமுடியும்.

(6ம் பக்கம் பார்க்க)

## 4 பேர் பலி!

### விஷம் கலந்த உணவு சாப்பிட்டனர்!

சென்னை, பெப். 20 விஷம் கலந்த உணவை உண்ட 4 பேர் மரணமானார்கள். மாவட்ட மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றபோது இவர்கள் காலமானார்கள். நாகபட்டினத்தில் இச்சம்பவம் நடந்துள்ளது.

மீன் உணவைச் சாப்பிட்ட 8 பேர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வைத்தியம்

ஹோமியோபதி டாக்டர்களாக இன்றே முழுநேர, ஓய்வுநேர நேர்முக வகுப்புகளில் சேருங்கள். அதிபர், வட இலங்கை ஹோமியோபதி கல்லூரி, 74, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 919

### சேவை

காணி விற்க அல்லது வாங்குவதற்கு உண்டா? விவசாயம், வர்த்தக விஸ்தரிப்புக்குக் கடன் தேவையா? தொடர்பு கொள்ளுங்கள்: பிராஜ்வல் என்ரப்பிரைசஸ், தையல் முத்துமாளிகை, 213/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 954

### கல்வி

ஜி. சி. ஈ. 1974 ஆங்கில இலக்கியம். இலக்கணம் (Emma, English Poems, Macbeth, English Prose) ஆங்கிலப் பேச்சு (Spoken English) வீடுகளில் வந்து கற்றுக் கொடுக்கப்படும். இங்கிலிஷ் மோவைக் யூனிற். விலாசம் இல: 164 'ஈழநாடு' மேற்பார்த்து, யாழ்ப்பாணம் 164

யாழ்ப்பாணம் 426, கே. கே. எஸ். ரோட்டிலுள்ள யாழ். நுண்கலைத் தொழிற் பாடசாலையில் இயந்திரவியல் மோட்டார் மெக்கானிஸம் 2 வருஷம், தையல் 1 வருஷம், நெசவு, இங்கள வகுப்புகள் நடத்தப்படும். சேர விரும்புவோர் 1-3-74 திகதிற்குள் விண்ணப்பிக்கவும். கௌரவ தலைவர் சிவ. சோமசேகரம், கௌரவ காரியதரிசி, இ. சபாலிங்கம். 975

ஒரே முறையில் விசேஷ சித்தி! வெக்குலின், வேதக் கோயில் ஒழுங்கை "இங்லிஷ் கியூரதி" இல் க. பொ. த. சாதாரணதர பரீட்சைக்கு ஆங்கிலம் தினசரி கற்பிக்கப்படும். 969

### விற்பனைக்கு

கருவாடு கோல் வகைகள் தயாரிப்பவர்களுக்கு ஏற்ற வகையில் அரைத்த உப்பு எங்களிடம் கிடைக்கும். குகதி இன்றன்டிங் மில்ஸ், வளிக்கிணற்று ஒழுங்கை கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 611. 992


## வேலணைக் கிராமசபை கேள்வி அறிவித்தல்

விபரம்:- நவக்கை ஆலம் புலம் வீதி வேலை.

வேலணைக் கிராமசபைத் தலைவரால் மேற்குறிப்பிட்ட வேலைசெய்வதற்கு சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் 1974-ம் ஆண்டு மாசிமாதம் 27-ம் திகதி புதன்கிழமை காலை 10-30 மணிவரையும், ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 26-2-1974 செவ்வாய்க்கிழமை ந. ப. 12-00 மணிவரை கேள்விப்பணம் ரூபா 30/-ம் பத்திரப்பணம் ரூபா 5/-ம் கட்டியதன் பேரில் உத்தியோக பூர்வமான பத்திரங்கள் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களுக்கு வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் கிராமச்சபை அலுவலகத்திலும், தீவுப்பகுதி பகிரங்க வேலைப்பகுதி காரியாலயத்திலும் அறிந்து கொள்ளலாம்.

க. சதாசிவம்
தலைவர்
கிராமசபை-வேலணை
632

# தாலிக்கொடி மோசடி வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வியா. பிறவுண் வீதி தாலிக்கொடி நம்பிக்கைமோசடி வழக்கில் எதிரி விடுதலைசெய்யப்பட்டார்.

ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த செ. தேவசேனாதிபதி என்பவர் பிறவுண்வீதியைச் சேர்ந்த பிரான்சிஸ் பெர்னாண்டோ என்பவரிடம் தாலிக்கொடியை வாங்கி விட்டு திருப்பித்தராமல் நம்பிக்கைமோசடி செய்ததாக இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரியின் மனைவி கலியாண வீட்டுக்குப் போகவேண்டும் என்று கூறி தாலிக்கொடியை வாங்கியதாக வழக்காளியான பெர்னாண்டோ சாட்சியமளிக்கையில் கூறினார். பலதடவை கேட்டபோது அதனை அடைவு வைத்துவிட்டதாகச் சொல்லி விட்டார் என்றும் பெர்னாண்டோ சொன்னார்.

டாக்ஸி சாரதியான அமிர்தலிங்கம் என்பவர் சாட்சிய மளிக்கையில் 21-10-72ல் தமது டாக்சியில் எதிரியான தேவசேனாதிபதி வழக்காளி வீட்டுக்குப் போனதாகவும், தாலிக்கொடியுடன் எதிரியும் வழக்காளியும் வந்ததாகவும் தாங்கள் மூவரும் அருமைராசா என்பவரிடம் சென்று அவர் மூலமாக தங்கராசாவிடம் தாலிக்கொடியை அடைவு வைத்ததாகவும், அடைவுவைத்த பணத்தை வழக்காளி எதிரியிடம் கொடுத்ததாகவும் சொன்னார். அருமைராசாவும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து எதிரியை விடுதலைசெய்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

எதிரி தரப்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினமும், வழக்காளி தரப்பில் ஆனைக்கோட்டை பொலிஸ் சார்பில் சட்டத்தரணி ஆர். விசுவநாதனும் ஆஜரானார்கள்.

# யாழ். விவசாயிகளுக்கு விரைவில் நீர் இறைக்கும் யந்திரம்!

(வண்ணார்பண்ணை, புதன்)

யாழ் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு இம்மாதம் இறுதியில் நீர் இறைக்கும் யந்திரம் பெறுவதற்கான உத்தரவுப் பத்திரங்கள் கொடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்திலிருந்து நீர் இறைக்கும் யந்திரம்பெறுவதற்கான உத்தரவுப்பத்திரத்திற்கு ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் விவசாயிகளிடமிருந்து வந்துள்ள போதும், யாழ் மாவட்டத்திற்கென தற்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள யந்திரங்கள் 333 மட்டுமே. இந்த 333 யந்திரங்களில் சிறியயந்திரங்கள் 153 பெரியவை 170ம் இருக்கின்றன. இவை யாழ் மாவட்டத்தில் உள்ள 15 காரியாதிகாரி பிரிவுகளிலுமுள்ள விவசாயிகளுக்கும் பங்கிடு செய்வதில் அரசாங்க அதிகாரிகளுக்கு பெருந் தலையிடியாக இருக்கிறது.

இதற்கான விண்ணப்பங்கள் அவ்வப்பகுதி கிராமசேவையாளர்களால் பரிசீலனை செய்யப்பட்டு, பின்னர் அவ்வப்பகுதி விவசாயப் போதனாசிரியரால் சிபார்சு செய்யப்பட்டு இதன் பிற்பாடு காரியாதிகாரியால் சிபார்சு செய்யப்பட்டு அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முக்கியமாக உடன் யந்திரம் தேவை என்று சிபார்சு செய்யப்பட்டுள்ளவர்களது பெயர்கள் தனியான ஒரு பட்டியலில் வரிசைப்படி தயாரித்து முன்னுரிமைப்படி யந்திரங்கள் பெறுவதற்கான உத்தரவுப்பத்திரம் கொடுக்கப்படவிருக்கிறது. மிஞ்சிவரும் விண்ணப்பதாரர்களுக்கு அவர்களது பெயர்கள் தாமதப்பட்டியலில் வைக்கப்பட்டு இரண்டாவது பட்டியலில் யந்திரம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக நம்பப்படுகிறது.

# சுவீப் முடிவுகள்

கொழும்பு, புதன்

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 459-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

**முதற் பரிசு**

23 V 0220 ரூபா 61,229.00

**இரண்டாவது பரிசு**

07 J 0187 ரூபா 24,488.00

**மூன்றாவது பரிசு**

24 G 0820 ரூபா 6,122.00

தலா 306 ரூபா 10 சதம் பெறும் 100 ஆறுதல் பரிசு டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 01 A 0739 | 04 A 0135 |
| 10 A 0416 | 12 A 0329 |
| 19 B 0917 | 22 B 0058 |
| 24 B 0133 | 28 B 0107 |
| 13 C 0335 | 13 C 0467 |
| 20 C 0907 | 22 C 0458 |
| 16 E 0393 | 17 E 0248 |
| 18 E 0351 | 20 E 0803 |
| 06 F 0169 | 07 F 0994 |
| 08 F 0747 | 21 F 0540 |
| 22 F 0793 | 24 F 0142 |
| 28 F 0621 | 02 G 0696 |
| 03 G 0419 | 04 G 0888 |
| 13 G 0800 | 02 H 0042 |
| 04 H 0649 | 21 H 0401 |
| 22 H 0896 | 24 H 0904 |
| 18 J 0464 | 25 J 0672 |
| 03 K 0988 | 20 K 0358 |
| 11 L 0564 | 23 L 0428 |

| | |
|---|---|
| 23 L 0546 | 13 M 0095 |
| 20 M 0051 | 20 M 0768 |
| 20 M 0836 | 23 M 0038 |
| 16 N 0178 | 20 N 0909 |
| 01 O 0062 | 06 O 0770 |
| 11 O 0732 | 13 O 0999 |
| 01 P 0395 | 11 P 0208 |
| 19 P 0776 | 22 P 0702 |
| 28 P 0823 | 06 Q 0403 |
| 07 Q 0677 | 18 Q 0702 |
| 01 R 0692 | 02 R 0127 |
| 05 R 0722 | 09 R 0128 |
| 20 R 0662 | 07 S 0410 |
| 24 S 0478 | 13 T 0427 |
| 13 T 0649 | 22 T 0604 |
| 22 T 0955 | 21 T 0829 |
| 28 T 0247 | 28 T 0239 |
| 15 U 0543 | 15 U 0683 |
| 19 U 0681 | 22 U 0861 |
| 14 U 0919 | |
| 12 V 0717 | 19 V 0953 |
| 07 W 0304 | 07 W 0401 |
| 18 W 0466 | 18 W 0717 |
| 20 W 0188 | 01 X 0321 |
| 02 X 0301 | 05 X 0433 |
| 06 X 0288 | 09 X 0885 |
| 09 X 0254 | |
| 06 Y 0374 | 08 Y 0475 |
| 13 Y 0753 | 17 Y 0741 |
| 01 Z 0432 | 08 Z 0786 |
| 09 Z 0634 | 22 Z 0862 |
| 23 Z 0268 | 08 Z 0375 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.)


போன் 410 ஸ்தாபிதம் 1939
போட்டோ ஸ்ராற் (PHOTO STAT)
புளு பிறின்ற் (BLUE PRINT)
5 நிமிடத்தில் பெற்றுக்கொள்ள
கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்


## மாங்குளம் காட்டில் கிடந்த சடலம்

மாங்குளம், புதன்

மாங்குளம் முல்லைத்தீவு ரோட்டில் உள்ள காட்டில் வயோதிப பிச்சைக்காரனின் சடலம் ஒன்று கிடக்கக்காணப்பட்டது. இவர் நோய்வாய்ப்பட்டு இறந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. உறவினர் யாரும் இருப்பதாக தெரியவில்லை. சடலம் பொலிஸ் பாதுகாப்பில் இருக்கிறது.

ருல் பிடிப்பதற்கு

# இம்மாத முடிவுக்குள் அனுமதி பெறவேண்டும்

(யாழ்ப்பாணம், வியாழன்)

சிங்கறுல் மற்றும் றுல் வகைகளைப் பிடிப்பதற்கும், விற்பனை செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும் இவ்வருடத்துக்கான அனுமதிப்பத்திரங்களை யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் விஸ்தரிப்பு அதிகாரியிடமிருந்து இம்மாதம் முடிவிற்குள் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா கேட்டுக்கொண்டார்.

சிங்கறுல் பிடிப்பதற்கும், அவற்றை உள்ளூரில் விற்பனை செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும் இவ்வருடம் முதல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாமல் றுல் பிடிப்பதோ, விற்பனை செய்வதோ அல்லது ஏற்றுமதி செய்வதோ கடற்றொழில் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படும். (தி.வ)

# பதுங்கிக் கொண்டிருந்த அரிசி வெளியே வந்தது!

(கண்டி, புதன்)

கண்டியில் இருபத்தேழு அரிசி மூடைகள் பிடிபட்டன. இந்தப் பெருந்தொகையான அரிசி சவர்க்காரப் பெட்டிகளில் பதுங்கிக்கொண்டிருந்தது.

கண்டி மத்திய சந்தையிலுள்ள மூன்று கடைகளில் இருபத்தேழு அரிசி மூடைகளும் சிக்கின. இரண்டு மூடை அரிசி லொறிக்குள் பதுங்கிக் கொண்டிருந்தது.

கண்டி மத்திய சந்தையில் உணவு இலாகா அதிகாரிகள் திடீர் சோதனையிட்டனர். மூன்று கடைகளில் அரிசி மறைத்துவைக்கப்பட்டிருந்தது.

# சர்வதேச குடும்பத்திட்ட கருத்தரங்கு 27, 28-ல்

பருத்தித்துறை, புதன்

சர்வதேசத் தொழில் ஸ்தாபனமும் தொழிற்றிணைக்களமும் ஒன்றிணைந்து நடாத்தும் குடும்பத்திட்டக் கருத்தரங்கு இம்மாதம் 27-ம், 28-ம் திகதிகளில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகராவால் ஆரம்பித்து வைக்கப்படும் முதல் நாள் கருத்தரங்கிற்கு தொழில் ஆணையாளர் திரு. டபிள்யூ. எல். பி. டி. மெல் தலைமைதாங்குவார்.

இதில் வைத்தியத்துறை இயக்குநர் டாக்டர் செல்வி சிவா. சின்னத்தம்பி அர்ச். பரியோவான் கல்லூரி அதிபர் திரு. கே. பூரணம்பிள்ளை யாழ். மாநகரசபை சுகாதார அதிகாரி டாக்டர் திருமதி பீ. துரைசுப்பா ஆகியோரும் 28-ம் திகதி நடைபெறவுள்ள கருத்தரங்கில் சர்வதேச தொழில் ஸ்தாபன நிபுணர் டாக்டர் கே. துரையப்பா, திரு. ஏ. வைத்திலிங்கம் யப்பானிய குடும்பத்திட்ட நிபுணர் திருமதி டாக்டர் ரெமேகாமேரி, டாக்டர் கே. சிவஞானரத்தினம், டாக்டர் திருமதி சி. அம்பலவாணர், டாக்டர் கே. அருள்பிரகாசம் எஸ். புவிராசசிங்கம், திருமதி ஜீ. சுந்தரலிங்கம், யாழ். சுகாதார கல்விப் போதகர் திரு. கோ. குமாரசிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

இக் கருத்தரங்குகளில் கிராமப்புற மக்களிடையே குடும்பத் திட்டத்தை ஜனரஞ்சகப்படுத்தல், குடும்பநலன்கள் குடும்பத்திட்டம் பற்றிய தப்பபிப்பிராயங்கள் ஆகியன இடம் பெறும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடர்ந்து நடைபெறவுள்ள இக் கருத்தரங்குகளை தொழில் திணைக்களம் ஒழுங்கு செய்துள்ளது. யாழ் கருத்தரங்கை திரு. கே. சச்சிதானம் (உதவித் தொழிலாணையாளர்) ஒழுங்கு செய்துள்ளார்.

## 4 வாரச்சிறை

(அச்சுவேலி, புதன்)

கார் கப்பிக்களைத் திருடிய குற்றத்திற்காக பொன்னன் சீனியன் என்பவருக்கு மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஜெகரத்தினம் நான்குவாரச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

வசாவிளான் வாசியான ச. சண்முகராசா, அதேயூரைச் சேர்ந்த மு. மாணிக்கன் ஆகியோரின் காரிலிருந்து நான்கு "கப்பில்" களவுபோனதாக அச்சுவேலி பொலிசில் இருவரும் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். ஐ. மிஸ்கின் தலைமையில் பொலிசார் விசாரணையை நடத்தியபோது சந்தேகத்தின்மீது ஒருவர் விசாரிக்கப்பட்டார்.

இவரின் முறைப்பாட்டிலிருந்து இன்னொரு நபர் வீட்டில் இப்பொருட்கள் இருப்பதாக அறியவந்தது. இவரையும் விசாரித்தபோது வசாவிளான் வாசியான பொன்னன் சீனியன் என்பவரே இப்பொருட்களை விற்றார் என அறியவந்தது.

இம் மூவர் மீதும் அச்சுவேலி பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

## முன்மாதிரிக் கிராமம்

கல்வியன்காடு, புதன்

வட்டுக்கோட்டைத்தொகுதியின் ஒருபகுதியை முன்மாதிரிக்கிராமமாக அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. காரைநகரிலுள்ள வியாவில் என்ற இடமே இம் முன்மாதிரியான கிராமமாக அமைக்கப்படவுள்ளது.

வட்டுக்கோட்டைத்தொகுதி எம். பி. திரு. ஆ. தியாகராசா எடுத்துக்கொண்ட முயற்சியின் பலனாக இத்நடவடிக்கைக்கு மேலிடம் இணங்கியுள்ளதாம். இக்கிராமத்திற்கான உதவிகளைச் செய்து கொடுப்பதற்கு மேற்கு ஜேர்மன் முன்வந்துள்ளது.

## நாகலாந்து தேர்தல்

புதுடில்லி, பெப். 20

நாகலாந்து தேர்தலில் இதுவரை வெளியான முடிவுகளில் ஐக்கிய ஜனநாயகக் கட்சி முன்னணியில் நிற்கிறது. 31 இடங்களை அது கைப்பற்றியுள்ளது. இதுவரை வெளியான 57 முடிவுகளில் பழைய அமைச்சர்கள் பலர் தோல்வி கண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மந்திரிசபையில் சேர மோஷேதயான் மறுப்பு

டெல்அவிவ், பெப். 20 இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் மோஷி தயான் திருமதி கோல்டா மேயரின் புதிய மந்திரிசபையில் பணிபுரியப்போவதில்லையென்று அறிவித்துள்ளார்.

ஜெனரல் தயானுக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கும் பலத்த எதிர்ப்பே இதற்கு காரணம் என்று தெரிகின்றது.

அக்டோபரில் நடந்த அரபு இஸ்ரேல் யுத்தத்தின்போது இஸ்ரேலுக்கு ஏற்பட்ட தோல்விகளுக்கு ஜெனரல் தயானே காரணமென்று பொதுவாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வந்துள்ளது. யுத்தம் ஆரம்பமானபோது இஸ்ரேல் இராணுவம் ஆயத்தமாக இருக்கவில்லையென்றும் இதற்கு இவரே பொறுப்பு என்றும் எதிர்க்கட்சிகள் கூறி வந்துள்ளன.

எதிர்ப்புகளுக்கிடையில் தொடர்ந்து பதவியிலிருக்க ஜெனரல் தயான் விரும்பவில்லை. ஜெனரல் தயான் தமது பதவியைத் துறக்க வேண்டும் அல்லது பதவியில் இருந்து நீக்கப்படவேண்டுமென்று கோரப்பட்டு வந்துள்ளது.

தற்காலிகப் பிரதமர் திருமதி மெயர் தமது புதியகூட்டு மந்திரிசபையை அமைப்பதில் பெரும் முயற்சி எடுத்து வருகிறார். இன்னும் ஒரு சில தினங்களுக்குள் புதிய மந்திரிசபையை அமைக்கமுடியாது போனால் அவரும் பதவியில் இருந்து விலகிக்கொள்ளக் கூடும் என்று கருதப்படுகிறது.

## பம்பாயில் புதிய எண்ணை படிவம்

(பம்பாய், பெப். 20) பம்பாயில் கடல் பகுதியில் புதிதாக எண்ணெய்ப் படிவம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 962 மீட்டர் ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த எண்ணெய் மிக உயர்ந்த ரகமானதென்றும் பீறிட்டுக்கொண்டு எண்ணெய் வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தொழில் நுட்ப உதவி: பதிலுக்கு எண்ணெய்

### பிரான்ஸ் — லிபியா ஒப்பந்தம்

பாரீஸ், பெப். 20 பிரான்ஸ் லிபியாவுடன் எண்ணெய் ஒப்பந்தமொன்றை செய்துகொண்டுள்ளது.

லிபியாவுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கி அதற்கு பதிலாக எண்ணெயைப் பெற்றுக்கொள்ள இந்த ஒப்பந்தம் வகைசெய்கின்றது.

சமீபத்தில் ஈரானுடன் பிரான்ஸ் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப்போலவே இதுவும் அமைந்துள்ளது.

லிபியாவில் அணுமின் ஆலையொன்றை நிறுவ பிரான்ஸ் உதவியளிக்கவிருக்கின்றது.



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி மதுமதி கதிர்காமராஜாவின் நடன அரங்கேற்றம் நாளை மாலை லண்டனிலுள்ள 'காமன்வெல்த் நிலைய' மண்டபத்தில் நடைபெறவுள்ளது. திருமதி ஜெயலட்சுமி கந்தையாவின் மாணவியான மதுமதி, திரு. திருமதி கதிர்காமராஜா தம்பதிகளின் புதல்வியாவார்.

# எகிப்துக்கு கடாபி திடீர் விஜயம்

கெய்ரோ, பெப். 20 லிபியா அதிபர் கேணல் கடாபி கெய்ரோவுக்குத் திடீர் விஜயம் செய்து எகிப்திய தேசிய சட்டசபை கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்.

இக்கூட்டத்தில் அவர் உரை நிகழ்த்துகையில் எகிப்து வீழ்ச்சியுற்றால் அரபுக்களின் வீழ்ச்சியாக அது இருக்கும் என்றும், அரபுக்களின் நலன்களை எகிப்து விட்டுக்கொடுக்கவில்லையென்றும் கூறியுள்ளார்.

# 20 மூடை கடத்தல் பீடி இலை சிக்கியது

வல்வெட்டித்துறை, புதன் இருபது மூடை கடத்தல் பீடி இலைகளை வல்வெட்டித்துறைப் பொலிசார் நேற்று முன்தினம் கட்டுமரத்திலிருந்து இறக்கிக் கொண்டிருக்கையில் கைப்பற்றினர்.

பொலிகண்டி குடியேற்றத் திட்டத்தின் முன்பாக உள்ள கடற்கரையிலேயே இம் மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டன. வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரூபசிங்கா ஆராய்ச்சி தலைமையில் சென்ற 9 பேர் கொண்ட பொலிஸ் கோஷ்டியினர் ரோந்து சுற்றிவருகையில் இவற்றைக் கைப்பற்றினர்.

கடத்தல்காரர்கள் இம் மூடைகளை கட்டுமரத்திலிருந்து இறக்கிக்கொண்டிருக்கையில் பொலிஸ் ஜீப்பைக் கண்டதும் அம் மூடைகளில் சிலவற்றை கடலில் வீசியெறிந்துவிட்டு தப்பியோடிவிட்டார்களாம்.

பொலிசார் தரையிலிருந்து 11 மூடைகளையும் கடலில் இருந்து 9 மூடைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது குடியேற்றத்திட்டத்திலுள்ள வீட்டிலிருந்து இரண்டு மூடை பீடி இலைகளையும் பொலிசார் கைப்பற்றினர்.

இம் மூடைகளை வைத்திருந்த குடியேற்றவாசியான திருமதி ஞானம்பாள் ஜேசுதாசனுக்கு வல்வெட்டித்துறை சுங்க இலாகாவினர் 1500 ரூபா அபராதம் விதித்தனர்.

கடற்கரையில் கைப்பற்றப்பட்ட 20 மூடை பீடி இலைகளும் வல்வெட்டித்துறை சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## அரபு நாடுகள் தயங்குவதன் காரணம்

பொன், பெப். 19 அபிவிருத்தி அடைந்து வரும் நட்பு நாடுகளுக்கு குறைந்த விலையில் எண்ணை கொடுப்பது பற்றி அரபு நாடுகள் பேசுகின்றனவே ஒழிய செயலில் எதுவும் காணவேயில்லை குறைந்த விலையில் எண்ணை கொடுக்கப்படுமானால் அது எப்படியும் மேற்கு நாடுகளுக்கு போய்விடுமென்று அராபியர்கள் பயப்படுவதனால்தான் நட்பு நாடுகளுக்கு உதவ அஞ்சுகின்றனர்.

இப்படி சுவிஸ்பத்திரிகையொன்று கருத்து வெளியிட்டுள்ளது.

## கடல் நீரில் இயங்கும் மோட்டார் வண்டி!

### இலங்கையர் கண்டுபிடிப்பு

(கொழும்பு, புதன்) கடல்நீரைப் பாவித்து மோட்டார் வண்டிகளைச் செலுத்தும் புது உத்தியொன்றைக்கண்டுபிடித்துள்ள இலங்கையரான தொழில் நுட்ப நிபுணருக்கு வேண்டிய உதவிகளையும் வசதிகளையும் செய்து கொடுக்க தொழில் அபிவிருத்தி சபை முன்வந்திருக்கின்றது.

இவர் கண்டுபிடித்துள்ள இந்தப்புதுமுறை நாட்டின் நலனுக்கு எந்தவகையிலும் உதவியாகவிருக்குமா என்பதை சபை கண்டறியவிருக்கின்றது.

றம்புக்கனையைச் சேர்ந்த எஸ்.பி ஜி விமலசேன என்பவர் இந்தப்புதிய உத்தியை கண்டுபிடித்துள்ளார். இவரின் வயது 29 ஆகும்.

# டியாகோகார்ஷியா தளத்திற்குஎதிர்ப்பு

## உலக அபிப்பிராயத்தை திரட்ட இந்தியா முயற்சி

(புதுடில்லி, பெப். 20 டியாகோகார்ஷியா தீவிலுள்ள ராணுவத்தளத்தை விஸ்தரித்துப் பெருக்குவதற்கு அமெரிக்கா மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கெதிராக உலக அபிப்பிராயத்தைத் திரட்டுவதற்கு இந்தியா முயற்சிசெய்யவிருக்கிறது.

இந்திய வெளிஉறவு அமைச்சர் சர்தார் சுவரண்சிங் இத்தகவலை லோகசபையில் அங்கத்தவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் வெளியிட்டார்.

உலக அபிப்பிராயத்தைத் திரட்டுவதன் மூலமே அமெரிக்காவும், பிரிட்டனும் டியாகோகார்ஷியாவில் ராணுவத்தளத்தை விஸ்தரிக்கும் திட்டத்தைக் கைவிடச் செய்ய முடியும் என்று சுவரண்சிங் சொன்னார்.

ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, தாய்லாந்து, நியுஸிலாந்து, பங்களாதேஷ், இலங்கை போன்ற நாடுகள் ஏற்கனவே அமெரிக்காவின் இந்த முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனவென்று அவர் தெரிவித்தார்.

டியாகோகார்ஷியா தீவில் தளம் அமைப்பதை ஈராக்கும் பங்களாதேசும் கண்டித்துள்ளன.

### இறக்கியவர்கள் ஓடிவிட்டனர்!

வல்வெட்டித்துறை, புதன் வல்வெட்டித்துறை ஊறணி என்னும் இடத்தை சேர்ந்த கடற்கரையில் 15,000 ஆயிரம் ரூபா பெறுமதியான 10 மூடை பீடி இலைகள் வல்வெட்டித்துறை சுங்க இலாகா பொறுப்பு அதிகாரி திரு கேதாரநாதன் தலைமையில் சென்ற கோஷ்டியிடம் அகப்பட்டுக் கொண்டது.

ஆயினும் அதனை கட்டுமரத்திலிருந்து இறக்கியவர்கள் ஓடிவிட்டனர்.

இதுசம்பந்தமாக எவரும் கைது செய்யப்படவில்லையாதலாலும் உரிமைகோரி எவரும்வராததாலும் மேற்படி பீடிஇலைகள் கடலுள் வீசப்பட்ட நிலைமையில் எடுக்கப்பட்டுவல்வெட்டித்துறை சுங்க அதிகாரி அதனைப் பொறுப்பு ஏற்றுக் கொண்டார்.

# கீஸிங்கர் மீண்டும் மேற்காஸியா செல்கிறார்

(வாஷிங்டன், பெப். 20) அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் டாக்டர் ஹென்றி கீஸிங்கர் மீண்டும் மேற்காசியா செல்கிறார்.

கோலான்குன்றுப் பகுதியில் இஸ்ரேலிய, சிரியப் படைகளை விலக்கிக்கொள்ளச் செய்வதற்கான முயற்சியை மேற்கொண்டு டாக்டர் கீஸிங்கர் மேற்காசியா செல்வதற்காக அமெரிக்க அதிபர் நிக்ஸன் அறிவித்தார்.

எகிப்திய வெளிவிவகார அமைச்சருடனும் சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சருடனும் டாக்டர் கீஸிங்கர் வாஷிங்டனில் நடத்திய பேச்சு

## கோலான் குன்றுப் பகுதியில் படை விலகல் செயல்படுமா?

வார்த்தைகளின்பின் அதிபர் நிக்ஸன் இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளார்.

சிரியா, எகிப்து, இஸ்ரேல் சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு டாக்டர் கீஸிங்கர் அடுத்தவாரம் செல்வாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோலான்குன்றுப் பகுதியில் இருதரப்பும் படைகளைப் விலக்கிக்கொள்வதற்கு ஒரு திட்டம் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் இதைச் செயல்படுத்தும் முயற்சியாகவே டாக்டர் கீஸிங்கர் மேற்காசியா செல்லவிருப்பதாகவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இதேசமயம் கோலான்குன்றுப்பகுதியில் இஸ்ரேலியத் துருப்புகளுக்கும் சிரியாத் துருப்புகளுக்குமிடையில் [illegible] பீரங்கிச் சண்டை [illegible] செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். ஆஸ்பத்திரியில் இறந்த

# மூன்று இளம் பெண்களின் மரணத்தில் சந்தேகம்!

(யாழ்ப்பாணம், வியா.)

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மூன்று இளம்பெண்களின் மரணம்பற்றி சந்தேகம் எழுந்துள்ளதால் மரணவிசாரணை அதிகாரி திரு. வி. நடராசா பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஒருஇளம்பெண் அல்லைப்பிட்டி மெதடிஸ்மிஷன் ஹவுசைச் சேர்ந்த 18 வயது குமார சுந்தரம் புஸ்பராணியாகும்.

இப்பெண் எவ்வித காரணமும் இல்லாமல் திடீரென வலியேற்பட்டுச் சிறிதுநேரத்தில் வாந்திஎடுத்தார். உடனடியாக சிறியதாயாரும் மிஷன் ஹவுஸ் அதிபரும் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றபோது அங்கு மரணமானர்.

மரணவிசாரணை யதிகாரி பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

மற்றப்பெண் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த 21 வயதான ஐயாத்துரை மங்களேஸ்வரியாகும்.

இப்பெண் கல்வியை முடித்தபி. வீட்டிலிருந்தசமயம் அவருக்குத் திருமண ஒழுங்கு செய்யப்பட்டதாகவும், அத்திருமணத்தை விரும்பாத அப்பெண் மனதிற்குள் வேதனைப்பட்டு விம்மிக்கொண்டிருந்ததாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

சடுதியாக நேற்று மாலை வீட்டிலிருந்த நச்சுத் திராவகத்தைக் குடித்துவிட்டு வரும்போது அடுத்தவீட்டிலிருந்தவர் அவரைக் கவனித்தாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது. ஆனல் நச்சுத்திராவகம் குடித்ததை நேரடியாக எவரும் காணவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை யதிகாரி பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

மூன்றாவது பெண் நீர்வேலி வடக்கைச்சேர்ந்தவர். வயது 18. பெயர் சின்னத்தம்பி எலிசபேத்.

இவர் நீராதவியாதியொன்றிஞல் அவஸ்தைப்பட்டு வந்தாரென்றும் இதனால் நித்திரை மாத்திரை உட்கொண்டு வந்தார் என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

மரண விசாரணையில் இப்பெண்ணின் வளர்ப்புத் தாயாரான அருளம்மா சாட்சியமளித்தார். அவர், சாட்சியமளிக்கையில் எலிசபேத்திற்கு அடிக்கடி வலிவருவதாகவும் இதனல் நித்திரை மாத்திரை பாவித்துவந்தாரென்றும் சம்பவதினம் மயக்கமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாரென்றும் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரியில் இப்பெண்ணைப் பரிசோதித்த டாக்டர் எவ்வாறு மரணம் சம்பவித்ததென்பதைக் கூறமுடியாத நிலையிலிருந்ததால் மரணவிசாரணையதிகாரி பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

வைத்திய அதிகாரி சாட்சியமளித்தபின்னர் தீர்ப்பு வழங்கப்படும். (க)

## தந்தியை முந்தியது தபால்

(நீர்வேலி, புதன்)

கிளிநொச்சியிலிருந்து இம்மாதம் 13-ந் திகதி காலை த. பாலலிங்கம் என்பவரால் நீர்வேலி வடக்கைச் சேர்ந்த த. சுந்தரலிங்கம் என்பவருக்கு அனுப்பப்பட்ட தந்தியொன்று மறுநாள் பிற்பகல் 3 மணிக்கே விலாசதாரரிடம் கிடைத்ததாம். ஆனல் பதின்மூன்றும் திகதி கிளிநொச்சியிலிருந்து இதேநபரால் அதே விலாசதாரருக்குஅனுப்பப்பட்ட சாதாரண கடிதம் மறுநாட்காலை 8 மணிக்குக் குறிப்பிட்ட நபருக்குக் கிடைத்துவிட்டதாகச் சம்பந்தப்பட்டவர் தெரிவித்தார்.

# 'பிஞன்ஸ்' வானை வழிப்பறி செய்ய முயன்றதாக வழக்கு

(யாழ்ப்பாணம், வியாழன்)

'பிஞன்ஸ்' செய்யப்பட்டிருந்த வான் ஒன்றை மறித்து அதனைக் கொள்ளையடிக்க முயன்றதாக ஒருவருக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் கொழும்பு பிஞன்ஸ் அன்ட் லீசிங் சேர்ஸ் கம்பனியைச் சேர்ந்த ஒருவர் மாங்குளத்திலிருந்து சுன்னாகத்தைச் சேர்ந்த தனிப்பட்ட கம்பனி ஒன்றுக்குச் சொந்தமான வானை கொள்ளையடிக்க எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. மாதாந்தக் கட்டுப்பணம் கட்டத் தவறியதற்காக வானை மீள வந்தபோது இச்சம்பவம் நடந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிபதி திரு. ரி. கருணாரத்தினம் முன்னிலையில் இவ்வழக்கு ஆரம்பமானபோது வழக்காளியான மானிப்பாயைச் சேர்ந்த பி. கனகசுந்தரம் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் புதிய நீதிமன்ற பரிபாலனத்தின் 102-ம் பிரிவின்கீழ் குறிப்பிட்ட வாகனத்தை வழக்காளியிடம் கையளிக்கவேண்டுமென்று நீதவானின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

எதிர்தரப்பில் ஆஜரான கொழும்பிலிருந்து வந்திருந்த சட்டத்தரணி ஏ. ரூபலிங்க, சில சட்டங்களை எடுத்துக்காட்டி இவ்வாகனம் 'பிஞன்ஸ்' கம்பனியிடமே கொடுக்கப்பட வேண்டுமென்றூர். அப்போது வழக்காளி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம், இதுவரை இவ்வாகனம் வழக்காளி பொறுப்பில் இருந்துவந்துள்ளதென்றும், இதை அனுபவிப்பது இதுவரை தடை செய்யப்படவில்லையென்றும் இவ்வழக்கு கிரிமினல் குற்றச்சாட்டாக இருப்பதால் நீதிமன்றம் தக்கபொறுப்பில் வாகனத்தை வழக்காளியிடம் சமர்ப்பிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இதற்கு ஆதரவாக அல்மேடா எதிர் டி. சொய்சா வழக்கையும் உதாரணமாக அவர் எடுத்துக் காட்டிஞர்.

நீண்டநேர வாதத்தின்பின் நீதிபதி வாகனத்தை வழக்காளி பிணையில் கொண்டு செல்ல அனுமதி வழங்கிஞர். மேல் விசாரணை ஏப்ரல் மாதம் 2-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

எதிரி சார்பில் சட்டத்தரணிகள் ஏ. ரூபலிங்க, எஸ் பாலேந்திரா, பி. என். ஹரேல்ட் ஆகியோர் ஆஜராயிருந்தனர்.

## மலையக மக்கள் கிளிநொச்சிக்குப் படையெடுப்பு

(யாழ்ப்பாணம், வியா.)

மலைநாட்டில் வேலையில்லாத காரணத்தினாலும் உணவுப் பஞ்சம் நிலவுவதாலும் அங்குள்ள மக்கள் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், வயோதிபர்களுமாக நூற்றுக்கணக்காக வடபகுதியில் கிளிநொச்சியை நோக்கிப் படையெடுத்துவருகின்றூர்கள் இங்கு வந்துள்ள தோட்டத்தவர்கள் அனைவருக்கும் வேலைகிடைக்காததினால் கிளிநொச்சிப் பட்டினப் பகுதியில் திரிந்து பிச்சையெடுத்து வருகிறூர்கள். இவர்களில் பலர் உணவு கிடைக்காததனால் மடிவியுடன் ஒட்டியுலர்ந்த வயிற்றுடனும் வீதியோரங்களிலும் கடைத்தெருக்களிலும் கிடப்பதைக் காணக்கூடியதாயிருக்கிறது. பிச்சைக்கார வயோதிபரொருவர் கிளிநொச்சிப்பழைய சினிமா நிலையத்திற்கு முன்பாக வீதியோரத்தில் இரு தினங்களுக்குமுன்பாக இறந்து கிடக்கக் காணப்பட்டார். உணவுக் கஷ்டத்தினால் திருட்டுக்களும் இப்பகுதிகளில் பெருமளவில் அதிகரித்துள்ளது. (தி-அ)

## இன்றைய பலன்

மாசி மீ 9-ந் திகதி
(21-2-74)

**மேஷம்:** முன்னேற்றப்பாதையில் தடைகள் உருவாகும். எதிரிகளின் சூழ்ச்சிகள்பலமாக இருக்கும்.

**ரிஷபம்:** கல்வித்துறையில் நல்லமுன்னேற்றம் காணப்படுகின்றது. ஆசிரியருக்குப் புகழ் குவியும்திருப்திகரமான தினம்.

**மிதுனம்:** மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு இலக்காவீர்கள். கடமையில் அதிக கவனம் செலுத்தவும். இறைநம்பிக்கை நன்று.

**கடகம்:** புதிய முதலீட்டை இன்று தவிர்த்துக் கொள்ளவும். பிரயாணத்தைப் பின்போடுவது விரும்பத்தக்கது.

**சிம்மம்:** காதலர்களுக்கு கற்கண்டான தினம். பெற்றோர்களின் ஆசியும் தப்பாமல் கிட்டும்.

**கன்னி:** கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரிகளைச்சம் பாதித்துக்கொள்ளுவீர்கள். எதற்கும் நன்குசிந்தித்த பின்பேமுடிவு எடுக்கவும்.

**துலாம்:** வெளியிடத் தொடர்புகளிலும் நல்லமாறுதல்கள் தென்படுகின்றன தெய்வபக்தி மேலிடும். சுமுகமான நாள்.

**விருச்சிகம்:** இல்லறத்திலும் இனிமைக்கிடமுண்டு. தொழில் துறையில் வெற்றி மகிழ்ச்சிகரமான தினம்.

**தனுசு:** சிலர் வாழ்க்கையில் அரசபயத்துக்கும் இடமுண்டு. சிலருக்குப் பதவி உயர்வு கிடைக்கலாம். மகிழ்ச்சிகரமான தினம்.

**மகரம்:** அபிப்பிராய பேதங்கள் மறைவதற்கும்இடமுண்டு மனைவியின் உடல் நலன்சிறிது பாதிக்கப்படலாம்.

**கும்பம்:** குடும்பக்கவலையுடன் குறுக்கு வழித் தலையீடு புதிர்போடும் வாழ்க்கையுடன் சோர்வுக்கும் இடமுண்டு.

**மீனம்:** நலன்தரும் சம்பவங்கள் நடக்கும். நகைவு சொல்லாமல்பார்க்கும். விழிப்புடன் இருப்பின் வெற்றி உமதே.

சோதிடக் கலாநிதி
திருமதி க. [illegible]

## பாடசாலை கிரிக்கெட் போட்டிகள்

# மானிப்பாயும், யூனியனும் இன்னிங்ஸால் வெற்றி!

(யாழ்ப்பாணம், வியா.)

கடந்த வாரம் யாழ்.மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளில், தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும், மானிப்பாய் இந்துக் கல்லூரியும் இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி வைத்தீஸ்வரா வித்தியாலயத்துடன் மோதிய போட்டியில் முதல் இன்னிங்ஸிலேயே 323 ஓட்டங்களைப் பெற்று யாழ். மாவட்டத்திலேயே இம்முறை எந்த ஒரு கல்லூரியும் இதுவரை பெருத மிகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற பெருமையைத் தட்டிக் கொண்டது.

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும், வைத்தீஸ்வரா வித்தியாலயத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் இந்து இன்னிங்ஸ் வித்தியாசத்தாலும் 212 அதிகப்படியான ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 323 ஓட்டங்களைப் பெற்றது. எஸ். ரூபகாந்தன் 95 ஓட்டங்களுடனும், ரி. நரேந்திரன் 75 ஓட்டங்களுடனும், எஸ். தர்மராசா 30 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஆர். செந்தில்நாதன் 101 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுகளைக் கைப்பெற்றிஞர்.

வைத்தீஸ்வரா வித்தியாலயம் முதல் இன்னிங்ஸில் மொத்தம் 32 ஓட்டங்களைப் பெற்றது. எஸ். ஹரீந்திரன் 30 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்திஞர். வைத்தீஸ்வரா 2-வது இன்னிங்ஸில் 79 ஓட்டங்களைப் பெற்றது. ஜி. சிவக்குமார் 30 ஓட்டங்களையும், எஸ். நரேந்திரன் 18 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் பெற்றனர்.

இப்போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### யூனியனும் இன்னிங்ஸால் வெற்றி

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும், வைத்தீஸ்வரா வித்தியாலயத்துக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் யூனியன் கல்லூரி இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

வைத்தீஸ்வரா வித்தியாலயம் முதல் இன்னிங்ஸில் 84 ஓட்டங்களைப் பெற்றது. எஸ். பாலசிங்கம் 16 ஓட்டங்களையும், எஸ். சத்தியநாதன் 27 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் பெற்றனர். 2-வது இன்னிங்ஸில் வைத்தீஸ்வரா மொத்தம் 85 ஓட்டங்களைப் பெற்றது. என். கருணாநிதி 24 ஓட்டங்களையும், என். மகேந்திரன் 21 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் பெற்றனர்.

யூனியன் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 185 ஓட்டங்களைப் பெற்றது. எம். மகேந்திரன் 38 ஓட்டங்களையும், என். தனபாலசிங்கம் 24 ஓட்டங்களையும், ஆர். செந்தில்நாதன் 49 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் பெற்றனர்.

இப்போட்டி யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே. தி.)

ப. நோ. கூ. சங்கம்

## மானிப்பாயில் பாவனையாளருக்கு வசதி

(மானிப்பாய், புதன்)

மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கத் தலைவர் நெருக்கடியையிட்டு ராஜினுமாச் செய்வதற்குக் கடிதம் கொடுத்தார் என்பதை அறிந்த நியமன இயக்குனர்களும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட இயக்குனர்களும் ஒருமித்து தலைவர் இராஜினுமாவை வாபஸ்பெற வேண்டுமென ஏகமனதாக அண்மையில் நடந்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேறியதுடன் அதன் பிரதியொன்றை கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளருக்கு அனுப்பியுள்ளனர்.

மேலும் அக் கூட்டத்தில் நுகர்வோருக்கும், பணியாளருக்கும் பயன்படும் வகையில் பலசெயல் திட்டங்கள் அமுல் நடத்தப் பட்டன.

அவற்றின் சில விபரம் வருமாறு:

சங்கப்பணியாளருக்கான ஆள் பணிவரையறை வந்து பணியாளருக்கான நியமனப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பணியாளர் ஒருவர் தேர்தல் மூலம் இயக்குனர் சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மானிப்பாய் கோவில் பற்றைச் சேர்ந்தவர்களுக்கு விண்ணப்பங்கள் மூலம் ரயர், ரியூப் வழங்கப்பட்டு வருகின்றது.

விவசாயிகளுக்கான இரண்டாவது மிளகாய் வெங்காய விவசாயக் கடன் கிராமிய வங்கிமூலம் கொடுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கான உற்பத்திக்கடன் கிராமிய வங்கிமூலம் கொடுக்கப்படும்.

## 24-2-74 வார மலர்

- இந்தும் கோவில்களில் கல்யாணம் நடத்தலாமா?
- காணக் கண்கோடி வேண்டும்!
- 'அவரைத் தேன் என் பேஞ'
- லூப் முறையின் நற்பயன்
- பெரிய புள்ளிகளுக்கு தலைதொரு 'நடமாடும்' அலுவலகம்
- முதன் முதலாக
- அறுசுவையில் - தேங்காயில்லாமல்சில தயாரிப்புகள்
- கப்பலோட்டிய தமிழர்கள்
- கூலுத்தர் ஏன் பிறந்தார்
- அடா மருமகா...
- சிரிக்க சில விடயங்கள்
- தாய்மை உள்ளங்கள் (சிறுகதை)
- நாவல்

28 பக்கங்களைத் தாங்கி இன்னும் பல சுவையான அம்சங்களோடு வெளிவருகிறது. உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.

## "பாடசாலைகள் விவசாயத்தில் முன்னேடியாக விளங்க வேண்டும்"

(புங்குடுதீவு, புதன்)

புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கடந்த செவ்வாய்க்கிழமை அறுவடைவிழாவைக் கொண்டாடினர்.

வித்தியாலய அதிபர் திரு. ஜே. சி செல்வராஜா தலைமையில் நிகழ்ந்த இவ்விழாவில் விவசாயக் கல்வியதிகாரி செல்வி ரி. பெரியதம்பி, கல்வி அதிகாரி திரு. செ. சிவப்பிரகாச, ஊர்காவற்றுறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. வ. நடராசா ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டனர்.

செல்வி ரி. பெரியதம்பியும், திரு நடராசாவும் அறுவடையினை ஆரம்பி[illegible] இதைத் தொடர்ந்து [illegible] பெற்ற பொதுக் கூட்டத்தில் செல்வி பெரியதம்பி பேசுகையில் 'பாடசாலைகள் விவசாயத்துறையில் நாட்டு மக்கள் அனைவருக்கும் எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும் மாணவர்களும் ஆசிரியர்களும் விவசாயத்தில் காண்பித்துவரும் ஆர்வத்தைத் தற்போது மக்கள் பாராட்டி முற்படுகிறார்கள். இந்நிலை தொடர்ந்து நீடிப்பின் நமது சுயதேவையினை நாமே பூர்த்தி செய்யும் நிலை விரைவில் உருவாவது திண்ணம் என்று குறிப்பிட்டார்.

வட்டாரக் கல்வியதிகாரி தி. நடராசா, கல்வியதிகாரி திரு. சிவப்பிரகாசம் ஆகியோரும் உரையாற்றினர்.

[illegible] பின் [illegible] புதுப் [illegible] உணவு அனைவருக்கும் பரிமாறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானத்தைக் கடத்த முயன்று பலியானுர்!

சைகோன், பெப். 20 தெற்கு வியட்னும் விமானம் ஒன்றைப் பலவந்தமாக வட வியட்னுமுக்குக் கடத்திச் செல்ல முயன்ற ஒருவர் தோல்வியுற்ருர். இந்த முயற்சியில் அத்தீவிரவாதியும் பிரயாணிகள் இருவரும் மரணமானுர்கள்.

தென்வியட்னுமில் தாலத் என்ற இடத்திலிருந்து புறப்பட்ட அந்த விமானத்தை வட வியட்னுமின் தலைநகர் நோக்கிச் செலுத்துமாறு எறிகுண்டு வைத்திருந்த அந்நபர் விமானிக்குக் கட்டளையிட்டார். விமானத்தைத் திசை திருப்பி ஓட்டிய விமானி வட வியட்னுமுக்குச் சற்றுத் தூரத்தில் எரிபொருள் காணுதென்று சொல்லி இறக்கினுர். விமானம் இறங்கும்போது அந்நபர் எறிகுண்டின் முனையைக் கழற்றினுர். அது உடனே வெடித்தது. அதனுல் அவரும் வேறு இரு பிரயாணிகளும் மரணமானுர்கள். விமானம் சேதமுற்றது. விமானி விமானத்தைப் பத்திரமாகத் தரை இறக்கினுர்.

# நீர்வேலியில் பேடன்பவல் நினைவுவிழா

யாழ்ப்பாணம், விஷா. சாரணரியக்கத்தின் தந்தையான பேடன்பவல் பிரபுவின் நினைவு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் நீர்வேலியில் கொண்டாடப்படவிருக்கிறது. யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் ஆதரவில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கல்லூரி அதிபர் திரு. க. நவரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வலி. கிழக்குக் காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளை பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார். மாவட்ட சாரண ஆசிரியர் திரு. இ. டோறஸ் வரவேற்புரையும் மாவட்ட ஆணையாளர் திரு. ஏ. வி. நாகராசா, வட்டாரக் கல்வியதிகாரி திரு. வி. கே. ஈசுரபாதம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர் மாவட்ட உதவி ஆணையாளர்கள் திருவாளர்கள் எஸ். சுந்தரமூர்த்தி டபிள்யூ. என். தேவகடாட்சம், கே. ஏச். சிதானந்தன், வி. ரி. நடராசா ஆசிரியர்கள் திரு. செ. சபாரத்தினம், திருமதி வேதவல்லி கந்தையா, திரு. வி. குணரத்தினம் ஆகியோர் உரையாற்றுவர். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். (அ)



# லண்டன பயணமானுர்

சங்கானையைச் சேர்ந்த ஏ. சிறீதரன் இயந்திரவியல் பொறியியலாளர் பட்டப்படிப்புக்காக லண்டன் பயணமானுர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர் சங்கானை சட்டம்பியார் வீதியைச்சேர்ந்த ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபரும், மக்கள் குழுத் தலைவருமான திரு. ஏ. கே. அழகசுந்தரன் தம்பதிகளின் புதல்வராவர்.

அனுராதபுரத்தில் உள்ள இலங்கை - மேற்கு ஜெர்மன் விவசாய இயந்திர பயிற்சி நிலையத்தில் பயின்ற காலத்தில் இவர் விசேஷ சித்தி பெற்றிருந்தார்.

நாகாலந்து தேர்தலில்

# எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை

புதுடில்லி, பெப். 20 நாகாலந்து மாநிலத்தில் நடந்த சட்ட சபைத் தேர்தலில் எக்கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இங்கு இன்னும் 3 தொகுதிகளின் முடிவுகள் வெளிவர வேண்டியிருந்தன. ஐக்கிய ஜனநாயக முன்னணிக் கட்சி 24 இடங்களைப்பெற்று முன்னணியில்இருக்கின்றது. நாகாலந்து தேசிய ஸ்தாபனம் 22 இடங்களைப்பெற்றிருக்கின்றது.

57 தொகுதிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. மேற்படி இரு கட்சிகளில் ஒன்று பதவிக்கு வருவதானுல் ஏற்கனவே வெற்றிபெற்றுள்ள சுயேச்சைகளின் ஆதரவைப்பெற்ருக வேண்டும். 11 சுயேச்சைகள் வெற்றிபெற்றிருக்கிறுர்கள்.

2-வது டெஸ்ட்

# மே. இந்தியா 534—4

கிங்ஸ்டன், பெப். 20 மேற்கிந்தியக் கோஷ்டிக்கும் இங்கிலாந்து கோஷ்டிக்கும் இடையே நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்ருவது நாளான நேற்று மேற்கு இந்தியக் கோஷ்டி 4 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 434 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இப்போட்டியில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான பிரட்றிக்ஸுக் ரோவும் 206 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டினர். பிரட்றிக்ஸ் 94 ஓட்டங்களையும் ரோவ் 120 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆட்டநேர முடிவின்போது அல்வின் களிச்சரன் 89 ஓட்டங்களையும் சோபர்ஸ் 36 ஓட்டங்களையும்பெற்று ஆடிக்கொண்டிருந்தனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து சகல விக்கட்டுகளையும் இழந்து 353 ஓட்டங்களைப்பெற்றது.

# அனலைதீவு மக்களின் நன்றி

[அனலைதீவு, புதன்]

நாட்டின் சகல பாகங்களுடனும் டெலிபோனில் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் அனலைதீவில் நேரடித் தொலைபேசி வசதியை ஏற்படுத்தித் தந்தமைக்காக தபாலமைச்சருக்கு நன்றி தெரிவித்து அனலைதீவு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளை செயலாளர் திரு. ஐ. நடராசா தபாலமைச்சர் திரு. செ. குமாரசூரியருக்கு பாராட்டுத் தந்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அனலைதீவு மக்கள் காலாதிகாலமாக அனுபவித்துவந்த கஷ்டங்கள் இன்றைய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தொலைபேசி வசதி ஆரம்பத்துடன் முடிவடைகிறது என்று அத்தந்தியில் கூறப்பட்டுள்ளது. அனலைத்தீவு முற்போக்குவாலிபர் இயக்கச் செயலாளர்திரு. எஸ். கே. காசிலிங்கமும் இது போன்ற தந்தியொன்றை தபாலமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

# பானுதேவன் நிதி மார்ச் 1ம் கையளிப்பு

(யாழ்ப்பாணம், வியாழன்)

ஆசிரியர் பானுதேவனுக்கு சுப்ரீம் கோர்ட் செலவுகளுக்காகத் திரட்டப்பட்ட நிதி அடுத்தமாதம் முதலாம் திகதி அவருக்கு ஒப்படைக்கப்பட விருப்பதாக வடபிரதேசத் தொழிற்சங்களின் கூட்டுச் சபைக் காரியதரிசி திரு. எம். குமாரசாமி சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களுக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் அறிவித்துள்ளார்.

சென். ஜோன்ஸ் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. பானுதேவன் கல்லூரி முகாமையாளரால் வேலைநீக்கம் செய்யப்பட்டதும் இதனைத் தொடர்ந்து நடைபெற்றவழக்கில் மீண்டும் அவருக்கு வேலை வழங்கவேண்டுமென்று தொழில் நீதிமன்றம் தீர்ப்பளித்ததும், இதனை ஆட்சேபித்துக் கல்லூரி முகாமையாளர் சுப்ரீம் கோர்ட்டுக்கு மேன்முறையீடு செய்ததும் தெரிந்ததே.

சுப்ரீம்கோர்ட் செலவுகளுக்காக திரு. பானுதேவனுக்கு நிதிசேகரிக்கும் பணியில் சகல ஆசிரிய தொழிற்சங்கங்களும் மற்றும் தொழிற்சங்கங்களும் ஈடுபட்டுள்ளது தெரிந்ததே.


றியோ
(யாழ். நகரமண்டபம்)

தினசரி 10-30, 4-45, 7-15, 9-45

இதுவரை கண்டிராத கராட்டி, ஜுடோ முதலிய பயங்கரக் காட்சிகள் நிறைந்த சித்திரம்.

அமெரிக்கா, ஸ்பெயின், இந்தாலி, சிங்கப்பூர், மலேசியா, ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஓடி உலகசாதனையைநிலை நாட்டிய சித்திரம்!

தசைனீஸ் பொக்ஸர்




(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு)

ராஜா (யாழ்ப்பாணம்)
ஜெமினி—பானுமதி நாகேஷ்—கல்பனு
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
பட்டத்து ராணி
(புதிய கொப்பி)

ஸ்ரீதர் சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் ஜெயந்தி — வாணிஸ்ரீ நடித்த
வெள்ளி விழா

ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஹாஸ்யப் பீரங்கி நாகேஷ் விஜயலலிதா நடித்த
தேன்கிண்ணம்

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு காலை 10-30.

"சொர்க்கம்" என்பது இறப்புக்குப் பின் ஏற்படுவது அல்ல! இல்லறத்தில் நல்வாழ்வும் இன்பமும் நிறைவதே "சொர்க்கம்"

இந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டு "ராமண்ணு"வின் டைரக்‌ஷனில் உருவாகி
★சிவாஜி★கே. ஆர். விஜயா
மனேகர், ராஜஸ்ரீ, சச்சு
முத்துராமன், பாலாஜி, நாகேஷ்
மற்றும் பலரின் உன்னத நடிப்பில் முத்துப்பெற்ற ஈஸ்ட்மென் வர்ண்ணச் சித்திரமே
சொர்க்கம்

3 ரிசர்வ் டிக்கட்டுகள் வாங்குபவருக்கு கலண்டர் ஒன்று பரிசளிக்கப்படும்

லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00, 2-00, இரவு 6-00, 9-30 மணிக்கு
முத்துராமன், காஞ்சனு, ரவிச்சந்திரன், ராஜஸ்ரீ, பாலையா, சச்சு நடித்த
ஸ்ரீதரின்
★ காதலிக்க நேரமில்லை ★
(ஈஸ்ட்மென் கலர்)

சாந்தி (சங்கானை)
தினசரி 6-30, 9-30
ஞாயிறு பி.ப. 2-30
எம். ஜி. ஆர்-கே. ஆர் விஜயா
தாழம்பூ
வி. வெ. ச 4-15, ஞா. 10-30
CARRY ON LOVING

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி-கே. ஆர். விஜயா
இரு மலர்கள்

REGAL (Jaffna)
Daily 4-45, 7, 9-30 p.m.
Sheer Terror
Hitchcok's Style
Mia Farrow
in
BLIND TERROR
(Children with Adults)

நாகம்மா
சுன்னுகம்
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு, பி. ப. 2-30
எம். ஜி. ஆர் - சாவித்திரி
மகாதேவி
(புதிய கொப்பி)

கடைசிவாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - அசோகன் ஜெயலலிதா - மனேரமா நடித்த
எங்கள் தங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

நம்மிடமுள்ள ஒப்பற்ற பொருள் உண்மைதான்; அதைச் சிக்கனமாகச் செலவு செய்வோம்; ஐயமேற்பட்டால் மாத்திரம் அதைச் சொல்லுவோம்.
— மார்க்ட்வைன்.

ஈழநாடு

(21 • 2 • 74)

## தட்டுப்பாடும் கட்டுப்பாடும்

தட்டுப்பாடு தலைதூக்க கட்டுப்பாடு கலைந்துவிடுவது இயல்பு.

கொழும்பில் மட்டுமன்றி நாட்டின் பல பகுதிகளிலும் கொலை களவு போன்ற குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன. வீடு உடைத்துக் களவெடுத்தல், கோஷ்டிகளவுகள் போன்றவை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன.

பொருள்களின் விலையேற்றம் வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவை களும் குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணங்களாக உள்ளன என்று பொலிஸ் மாஅதிபர் திரு. ஸ்டான்லி சேனநாயக்கா நேற்று முன்தினம் நடைபெற்ற மகாநாட்டில் கூறியிருக்கிறார்.

அந்த விளக்கத்தில் எவ்வித வியப்புமில்லை. உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடாகிய இந்தியாவின் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி தமது தொடக்க வுரையை பத்துநிமிடம் வரை நிகழ்த்த முடியாத வகையில் குழப்பமும் கூச்சலும் இருந்ததாகச் செய்தி; காரணம்: மார்க்ஸியவாதக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பணவீக்கம், பற்றாக்குறை, உணவுத் தட்டுப்பாடு போன்ற காரணங்களைக்கொண்டு கோபாவேசங் கொண்ட கோஷத்தைக் கிளப்பியதே!

ஒரு நாட்டின் தெரிந்தெடுத்த மக்கள் பிரதிநிதிகள் இவ்வாறு நடக்கமுடியுமானால் சாதாரண பிரஜைகள் என்னென்ன குற்றங்களில் ஈடுபடக்கூடுமென்பது விளக்கவேண்டியதில்லை.

பொலிசாரின் பொறுப்பில் நிலைமையை ஒப்படைத்துவிட்டால்போதுமா? பொலிஸ் மாஅதிபரின் விளக்கம் இதற்கு விடையாகும். கொழும்பில் குற்றத் தடுப்புப்பிரிவு இருந்தபோதிலும் இங்கும் குற்றச்செயல்கள் கூடிக்கொண்டுதான் வருகின்றன; இதற்குஒரு விசேஷ காரணம் உண்டு; பெற்ரோல் நெருக்கடி காரணமாக பொலிஸ் வாகனப் பாவிப்பு முன்னரைவிட 75 சதவிதம் குறைக்கப்பட்டுள்ளது; இதனால் பொலிசார் கால்நடையாகவே தமது ரோந்து நடவடிக்கைகளைப் பெருமளவு மேற்கொள்ள வேண்டியுள்ளது.

சாதாரண காலத்திலேயே பொலிஸாரின் கடமைகடினமானது; குற்றத்தைத்தடுக்கவோ, கண்டுபிடித்து தண்டனை விதிக்கவோ நாட்டின் பொலிஸ் படை என்றுமே தக்க அளவிற்கு இருக்கவில்லை.

பொலிசாருக்கு இராணுவமே உதவி செய்யவேண்டிய சந்தர்ப்பங்கள் அடிக்கடி அதிகரித்துவருகின்றன; அரிசித்தடையை அமுல் நடத்த பொலிசார் மட்டுமல்ல ராணுவமும் தேவைப்படுகின்றது. அரிசியை விற்கவும்முடியாது; கொண்டு செல்லவும் முடியாது. விவசாயி மேலதிகமான நெல்லை நெற்சபைக்குத்தவிர வேறெவருக்கும் விற்கக்கூடாதென்பது கட்டுப்பாடு; ஆயினும் இதை அமுல் நடத்துவது இலகுவான காரியமல்ல.

எந்த ஆபத்தான நிலையிலும் மக்கள் தேர்ந்தெடுத்த அரசாங்கம் கட்டுப்பாட்டை நிலைநாட்டவேண்டியது அதன் தலையாய கடமை; ஆனால் கட்டுப்பாட்டால் குற்றத்தையும் குற்றத்துக்கு ஏதுவான தட்டுப்பாட்டையும் நீக்கிவிடவோ குறைத்துவிடவோ முடியுமென்று எண்ணுவது பகற் கனவாகும்.

கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் கேலி செய்யும் நோக்குடன் நாம் இவ்வாறு கூறவில்லை; பொது மக்களின்-விசேஷமாக விவசாயிகளின் அவலநிலையை அரசாங்கம் அனுதாபத்துடன் நோக்கவேண்டும்; இட்டது சட்டம், நெற்சபைக்கு நெல்வந்துசேரும்; பங்கீட்டரிசியைக் கூட்டிவிடலாமென்று நினைப்பது வீணாகும்; அரிசித்தடையை அமுல் செய்யவேண்டுமானால், கொள்ளைலாபமடிக்க முயலும் தேச விரோதிகளைத்தவிர மற்றும் விவசாயிகள் அனைவரும் மனமுவந்து நெல்லை நெற்சந்தைக்கு விற்க முன்வரவேண்டும். தடைகளாலும், பொலிஸ் ராணுவ நடமாட்டங்களாலும் நெல் கொள்வனவில் வெற்றி கண்டுவிடமுடியாது.

விளைந்தநெல் சபைக்கு வந்துசேரவில்லை; ஏன்? எப்படி வரச்செய்யலாம்: உணவுற்பத்தியை அதிகரிக்க உதவிய அரசு, விளைந்த நெல்லை வாங்கும் விவேகமுள்ளதாகவிருக்கவேண்டும்; தடைகள் தொழிற்பட்டால் வருங்கால உற்பத்தியே தடைப்படும்; அரசாங்க நடவடிக்கைகளை எவ்வாறு முறியடிக்கலாமென்ற மனப்பான்மை அகலுவதற்கு அரசாங்கம் உதவவேண்டும். விலையேற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், பற்றாக்குறை-இவைக்கு நிவாரணம் தேடும் ஆக்கவேலைகள் அவசியம். பொதுமக்களின் ஆதரவே முதல்தேவை; அதற்கு கட்டுப்பாடு மட்டும் போதுமா? தட்டுப்பாட்டைத் தீர்க்கும் வழிகளில் தீவிரமாக இறங்குவதே இன்றையதேவை.




அருளுடைமை

அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல்.

அறியாமையாகிய இருள் பொருந்திய துன்ப உலகில் இருந்துவாழும் வாழ்க்கை அருள் பொருந்திய நெஞ்சம் உடையவர்களுக்கு இல்லை.

"அரசின்

## முன்னேற்றத்திட்டங்களுக்கு தடையாக உள்ளனர்"

யாழ்ப்பாணம், வியாழன்

"எமது நாடு பொருளாதார ரீதியாக சுதந்திரமடைய வேண்டுமானால் வெறும் பேச்சை நிறுத்திச் செயலில் இறங்கவேண்டும். நாளுக்கு நாள் வாழ்க்கைச்செலவு உயர்ந்து கொண்டே போகின்றது. மற்றும் பிரச்சினைகளும் பொதுமக்களைப்பாதித்துக்கொண்டேயிருக்கின்றது" என்று இலங்கைக்கம்யூனிஸ்ட் கட்சி (பீட்டர்சார்பு) வடபிரதேசக்காரியதரிசி திரு. எஸ். விஜயானந்தன் யாழ். மாவட்டத்தில் உள்ள கட்சிக்கிளைக்காரியதரிசிகள் வாலிபர் சங்கக் காரியதரிசிகள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"முதலாளித்துவ சமூக அமைப்பிலிருந்து சோஷலிச அமைப்பிற்கு மாறும் காலகட்டத்தில் இப்படியான பிரச்னைகள் வந்தேதீரும். இவற்றை எதிர் நோக்குவதன்மூலமே பிரச்னைகளைத் தீர்க்கமுடியும்.

"அந்நிய ஏகாதிபத்தியங்களிடமிருந்து பொருளாதார ரீதியாக விடுபடுவது மிகமுக்கியம். உள்நாட்டு நிலப் பிரபுத்துவ எச்ச சொச்சங்களை ஒழித்துக்காணிச்சீர்திருத்தம் செய்ய வேண்டும். உள்நாட்டு ஏகபோக முதலாளித்துவம் ஒழிய வேண்டும். பொதுத்துறையை பலப்படுத்தி சுதந்திரமான பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும். இவற்றைச்செய்ய அரசு பல திட்டங்களை வகுத்துள்ளது. ஆனால் சில அதிகாரிகளும் அரசுக்கு விசுவாசமற்றவர்களும் அரசு சார்புள்ளவர்களாக நடித்து அரசின் திட்டங்களைப் பின்தள்ள முயற்சிக்கின்றனர்தேசத்தின்முன்னேற்றத்தில் அக்கறையுள்ளவர்கள் இவற்றைச் சுட்டிக்காட்டத் தவறக்கூடாது". (அ)

### 2 மூடைமாவு வைத்திருந்தாராம் எதிரி விடுதலை

(முல்லைத்தீவு, வியா)

முல்லைத்தீவு நியூ அம்பாள் கபே முகாமையாளர் கந்தையா சோமாஸ்கந்தர் மீது முல்லைத்தீவு பொலிசார் மேலதிகமாக இரண்டுமூடை மாவை வைத்திருந்ததாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. ரி. தருணைரத்தினம் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது, விசாரணையின் பின் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

எதிரி சார்பில் சட்டத்தரணிகள் அ. ஆலாலசுந்தரம் வின்சன் சட் பாலலிங்கம் ஆகியோர் ஆஜராகி வாதாடினர்.

### நெல் — —

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எப்பொழுதோ ஒழிக்கப்பட்டிருக்கும். தற்போது அமுல் செய்யப்படும் இத்திட்டம் மூலம் அரசு பெருந்தொகையான நெல்லைக் கொள்வனவு செய்ய வழி ஏற்பட்டுள்ளது. அரசாங்க உயர் அதிகாரிகளை ஆனையிறவுத் தடையில் நியமித்ததன் மூலம் ஊழல்கள் எல்லாம் ஒழிந்து விட்டது. அத்துடன் ப. நோ. கூ. சங்கங்கள் மட்டுமே நெல், அரிசியைக் கொண்டு செல்லலாம் என்ற சட்டம் தீவிரமாக அமுல் படுத்தப்படும் போது ஆனையிறவுத் தடை இருக்க வேண்டிய நிலைமை இருக்கவே மாட்டாது. படிப்படியாக இதுவும் எடுக்கப்பட்டுவிடும். இதன் மூலம் எனது நீண்ட நாள் ஆசை நிறைவேறிவிடும்.

அரிசி விலையை வடக்கில் குறைக்க வேண்டுமானால் இப்பகுதி விவசாயிகள் தேசாபிமானத்துடன் நடக்க வேண்டும். இதுவே அரசாங்கம் எதிர்பார்ப்பது".



### ஸ்ரீ சத்ய சாயிபாபா

7

திருவாய்மொழிகள்

சாற்றரும் ஆத்மீக சாதனை யோடும்
ஆற்றலும் அன்பும் அறிவும் மிகுந்து
போற்று மிடத்துப் புகழவதாரம்
ஏற்றே யெடுப்பேன் இன்னருள் நல்க.

0 0 0

உலக மக்களுக்கு அருள் கொடுப்பதற்காக; ஆத்மீக சாதனை, ஆற்றல், அன்பு, அறிவு முதலியன சிறந்து விளங்கும் இடங்களில் நான் அவதாரம் எடுப்பேன்.

பாட்டும் பயனும்
— 'பன்னை முலை'

### சகல துறைக்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

என்பதில் ஐயமில்லை. தேசிய ஒருமைப்பாட்டுக்கு இது சிறந்த வழியாகும். இம்முறை விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந்தவர்களுக்குப் பல்கலைக்கழகத்தில் நுழையும் ஆவலைப் பூர்த்திசெய்வீர்கள் என நம்புகின்றோம்".

சுதந்திரக் கட்சியினதும் ஐக்கிய முன்னணியினதும் ஆதரவில் உடுப்பிட்டித்தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. கே. ரி. ராஜசிங்கம் இம் மகஜரைக் கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார். (அ)

### இன்று திறப்பு விழா

(பருத்தித்துறை, வியாழன்)

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்க ஆதரவில் நெல்லியடிப் பகுதியில் ஒரு சப்பாத்துத் தொழிற்சாலை இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா திறந்துவைக்கவுள்ள இத்திறப்பு விழாவில் வடமராட்சி தெற்கு, மேற்கு காரியாதிகாரி திரு. கா. மாணிக்கவாசகர், உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி. இ. குலநாயகசிங்கம், பொன். குமாரசாமி ஆகியோர் பேசுவர்.

### நாடும் நடப்பும்

யாழ்ப்பாண நகரில் சென்ற இரண்டு தினங்களாக பல வீதிகள் இரவில் இருள் சூழ்ந்திருந்தன. இதுபற்றி விசாரித்தபோது இரண்டு உபமின் நிலையங்களில் பழுதேற்பட்டதாகவும் அவை திருத்தப்பட்டு இன்றுமுதல் ஒளி வீசும் என்றும் தெரிவித்தார்கள்.

நாடுமுழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மின்சக்தியைக் குறைவாகப் பாவிக்கவேண்டுமென்ற கோரிக்கையை முன்னிட்டு வெளிச்சம்போடும் நேரத்தைக் குறைத்துள்ளார்களாம்.

நிலவுகாலத்தில் வெளிச்சத்தைக் குறைக்கலாம், அமாவாசை இருட்டுக்காலத்தில் வெளிச்சத்தைக் குறைப்பது தான் வழிப்பறி, திருட்டு, கொள்ளை ஆகிய செயல்களில் ஈடுபடுவோருக்கே இலாபம்!

0 0 0

திருடுவது குற்றம். அதே போல் திருடுவதற்குச் சந்தர்ப்பம் கொடுப்பவர்களும் குற்றவாளிகளே. பொருள்களை தகுந்த பாதுகாப்பில்லாமல் வைப்பதும் திருடும் நோக்கமில்லாதவர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுக்கத் தூண்டுவதும் குற்றமாகும்.

தாலிக்கொடியை அறுத்துச் சென்றான்; சங்கிலியைப் பிடுங்கிச் சென்றான், வீட்டு விறாந்தையிலுள்ள நாற்காலியைக் காணவில்லை. வீட்டு வாசலில் நின்ற சைக்கிளை யாரோ களவாடிவிட்டான். என்றெல்லாம் செய்திகள் வெளிவருகின்றன.

இதற்கு இப்பொருள்களின் உரிமையாளர்களும் பொறுப்பேற்கத்தானே வேண்டும்!

0 0 0

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது காய் கறி மலிவு என்று ஒரு நண்பர் கூறிய பொழுது மற்றொரு நண்பர் இடைமறித்து வெங்காயந்தான்மட்டும் என்று கூறினார்.

வெங்காயந்தான் மட்டுமல்ல. வெங்காயமும் விலை குறைந்துவிளதென்று நண்பர் சொன்னபோது விவசாயிகள் தான் விலைகுறைந்துவிட்டதென்று சொல்கிறார்களே யொழிய வியாபாரிகளும் தரகர்களும் அப்படிச் சொல்லக்காணோமே என்றார் மற்றவர்.

தரகர் தொல்லை என்றுதான் ஒழியுமோ?

காய்கறிகளிலிருந்து கல்யாணம்வரை தரகர்களில்லாமல் எதுவும் நடக்காதோ!

என்னதான் பதுக்கலையும், கொள்ளை இலாபத்தையும் தரகர் தொல்லையையும் ஒழித்துக்கட்டப்போவதாக யார்தான் வீறுப்பாகப் பேசினாலும் அவை தன்பாட்டுக்கு நடந்துகொண்டேயிருக்கிறது.

— ஊர்சுற்றி

### இன்று கோபாலன் கேடயக் கிரிக்கட்

கொழும்பு, வியாழன்

தமிழ்நாடு கிரிக்கட் கோஷ்டிக்கும், இலங்கைக் கோஷ்டிக்குமிடையே கோபாலன் வெற்றிக் கேடயத்திற்கான மூன்று நாள் கிரிக்கட்போட்டி கொழும்பு ஓவல் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.

தமிழ்நாடு கோஷ்டிக்கு வி. வி. குமாரும், இலங்கைக் கோஷ்டிக்கு அனுரா தென்னக்கோனும் தலைமைதாங்குகின்றனர். ......

### ஜயந்தி

(உடுப்பிட்டி, புதன்)

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் 139-வது பிறந்தநாள் திதி பூஜை பருத்தித்துறை ஸ்ரீ சாரதாநிலைய சேவாச்சிரமத்தில் வரும் 24-ந் திகதி சிறப்பாகக் கொண்டாடப்படுமென்று சேவாச்சிரமப்பொதுச் செயலாளர் பி ஏ இரத்தின சபாபதி அறிவித்துள்ளார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரீ ... கோவில் வீதி 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1974-ம் ஆண்டு பெப்ரவரி 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. The Eelanadu ... Jaffna. ... EELANADU ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org